திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். இங்கே பேசிய சில வார்த்தைகள் இந்த சபையின் கண்ணியத்தையும் கௌரவத்தையும் குறைப்பதாக இருக்கின்றன. இந்தமாதிரி பேசுவது சரியா? இதற்கு முன்னாலே . . . (குறுக்கீடு). (மணியடிக்கப்பட்டது).

6. நடைமுறைக் கேள்வி.

துணை மானியக் கோரிக்கையில் கண்டுள்ள பொருள் குறித்தே துணை மானிய நிதி அறிக்கை மீதான விவாதத்தில் பேசுவது குறித்து

THIRU K. T. K. THANGAMANI : Sir, I am raising a point of order with regard to the discussion on the Supplementary Budget. Rule 160 says—

'The demands for supplementary or additional grants shall be dealt with as if they were demands for grants :

Provided that the discussion of a demand for a supplementary or additional grant shall be confied to the details of which it is composed . . . .'

There is a general rule about relevance. I am making a general observation. I am not referring to the speech of a particulars Member. Discussion on the Supplementary Demand is very much limited and whenever cut motions are given, they should relate to a particular item of expenditure.

So, in the discussion on the Supplementary Budget if you can guide and help us, it would be useful. Otherwise, it becomes a general discussion on the Budget or like the discussion on the Finance Bill where you can talk on anything under the Sun. Because we are disscussing the Supplementary Budget, I request that you may direct hon. Members to strictly conform to the relevant points raised in the Supplementary Budget.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னதை நான் அப்படியே ஒப்புக்கொள்கிறேன். திரு. லத்தீப் அவர்கள் பேசிய பிறகு சொன்ன அந்த விளக்கத்தை காளிமுத்து அவர்கள் பேசுகின்றபோது சொல்லியிருந்தால் மிகப் பொருத்தமாக இருந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய கவனத்திற்கு திரு. தங்கமணி அவர்கள் ஒரு கருத்தைக் கொண்டுவந்தார்கள். துணை மானியக் கோரிக்கை மட்டுமல்ல, வேறு எந்த மானியக் கோரிக்கை வந்தாலும் பேரவையில் என்ன பொருள் பற்றி விவாதிக்கப்பட வேண்டியிருக்கிறதோ அதைப் பற்றி மட்டுமே பேசுவதுதான் பொருத்தமுடையதாகும். அதிலே பேரவைத் தலைவர் கண்டிப்பாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் பேரவைத் தலைவர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வரக்கூடிய நிலைமைதான் இருக்கும். அதையும் நான் பார்த்துக்கொள்ள வேண்டும்.

1973-74-ஆம் ஆண்டுக்கான இறுதி துணை நிதி அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற துணை மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

துணை மானியக் கோரிக்கையிலே முக்கியமாக ஒரு கோடி ரூபாய் கைத்தறி நெசவாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் நேற்று இந்த மானியத்தின்மீது பேசும்போது பலரும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவைகளிலே முக்கியமாக நெசவாளர்களுக்குத் தேவைக்கு ஏற்றபடி 'நூல் நல்ல முறையிலே விநியோகம் செய்யப்பட வேண்டும் என்பது. அதைச் செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, மண்ணடியிலே இருக்கக்கூடிய காவலர் இல்லங்களை இடித்து, புதுப்பித்து அந்த இடத்திலே வீடுகள் கட்டுவதற்காக அரசாங்கம் 46 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். சென்றமுறை நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களிடம் எடுத்துக் கூறிய இந்தக் கருத்திற்கு அவர்கள் செவி சாய்த்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய ஸ்ரீரங்கத்தியிலே—திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தது—காவேரி, கொள்ளிடம் கரைகளை பலப்படுத்த வேண்டுமென்று முக்கியமாகக் கூறப்பட்டிருக்கிறது. கரைகளைப் பலப்படுத்துகின்ற இந்த நேரத்தில்—அதை நான் வரவேற்கிறேன். அங்கே இருக்கின்ற பாலம் அதிகப் போக்குவரத்து செல்லக்கூடியதாக இருக்கிறது; அதையும் பலப்படுத்த வேண்டும். அதோடு அங்கே ஒரு ஆண்டு காலமாக விளக்கு எரியாமல் இருக்கிறது. அதைப்பற்றி பலமுறை கூறியிருக்கிறேன். அதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.